தேவையான கோரிக்கைகள் வந்தால் அப்பொழுது இவைகளைப் பற்றி பரிசீலனை செய்யலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொன்னமராவதியில் ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்த தற்சமயம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் ஒரு செயற் குறிப்பும் இல்லை என்றாலும் 1978–79-ம் ஆண்டுக்குரிய நுண் தொழிற்கூடங்கள் கட்டும் திட்டத்தின்கீழ் (Tiny sector programme) 10 சிறிய தொழிற்கூடங்கள் பொன்னமராவதியில் அமைக்க சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் உத்தேசித்திருக்கிறது. அதற்கு இயந்திரங்கள் தளவாடங்கள் முதலியவற்றில் மூலதன முதலீடு ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்படாத தொழில்களே சிறுதொழில்கள் என எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கடந்த கால அனுபவம் என்று சொன்னார்கள். அந்த அனுபவம் என்ன என்று விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய அனுபவம் தர்மபுரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், ஹொசூர், ராணிப்பேட்டை போன்ற இடங்களில் எல்லாம் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன என்பது என்னுடைய அனுபவம். ஆனால் அவருடைய அனுபவம் என்னவோ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கடந்த கால அனுபவம் என்று சொன்னது மாவட்டங்களில் உள்ள தொழில் முனைவர்கள் அவர்களாகவே இங்கே வந்து எங்களுடைய பகுதிகளிலே தொழிற்சாலை துவங்க இருக்கிறோம், அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லுகிற நிலைமை இருந்தது என்பதைக் குறிப்பிடுவதாகும். ஆனால் இப்பொழுது இந்த மோடிவேஷன் காம்பைன்களில் உள்ளவர்கள் நேரிடையாகச்சென்று தொழில் முனைவர்களைச் சந்தித்து, கடன் வழங்கும் நிறுவனங்களின் மூலம் கடன் வசதிகளைக் கூட பெற்றுத் தந்து சிறு தொழில்களைத் தொடங்க உதவியளிக்கப் பெறுகிறது. நடுத்தர, பெரிய தொழிற்சாலைகள் சம்பந்தமாக அரசு தனியாக கவனம் செலுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 216—இதே அமைச்சருடைய பதிலில் வரும் என்பதால் கேள்வி எண் 216 எடுக்கப்படுகிறது.

தாளவாடியில் பட்டு நூல் தயாரிப்பு

* வினா எண் 216—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு கிராமத்தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979 மார்ச் 3]

கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த தாளவாடியில் பட்டு நூல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

இல்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி போன்ற பிற்பட்ட பகுதியில் பட்டுநூல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஆய்வில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது பிற்பட்ட பகுதியாக இருப்பதால், தனிப் பட்டோர் முயற்சியில் ஒரு பட்டுநூல் தொழிற்சாலையை அமைத்து அந்தப் பிற்பட்ட பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலாவது அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 11-1-1972-லிருந்து பட்டு நூற்பு தொழிற்சாலை ஒன்று தாளவாடியில் இயங்கி வருகிறது. இதனால் புதிதாக வேறு ஒரு தொழிற்சாலையை அரசு சார்பில் அமைப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தனி நபர்கள் முன் வந்தால் அவர்களுக்கு வேண்டிய அனுமதி வழங்குவதோடு அவர்களின் மொத்த மூலதனத்தில் பொருளாதார உதவியாக 25 சதவீதம் உதவித் தொகை கொடுத்து அந்தத் தொழிலை நிறுவுவதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவு செய்துள்ள சித்த வைத்தியர்கள்

*வினா எண் 214—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சித்த வைத்தியர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் முறையைக் கைவிட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், போலி மருத்துவர்கள் பெருகி வருவதைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) 1970–ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மையக்குழு சட்டம் (Indian Medicine Central Council Act 1970) 17-வது பிரிவின் படி, அச்சட்டத்தின்கீழ் ''அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதி''